DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No: CC.28/2024**

Prosecution witness **PW.9 (LW.10)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Valarmathi (SI) | Caste | : | |
| Father Name | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |
| Time | : | | | | |

**(A1, A2 present. Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **13.02.2026**

**13.02.2026 முதல் விசாரணை** :

1. நான் தற்போது செங்கல்பட்டு மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. இதற்கு முன்பு கொலக்கொம்பை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது 09.02.2024ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சங்கரன் அவர்கள் பதிவு செய்து தனது முதற்கட்ட புலன் விசாரணையை முடித்து எனது பார்வைக்கு வைத்த நிலைய குற்ற எண்.22/2024 இதச பிரிவுகள் 294(பி), 324, 427, 506(2)ன்படியான வழக்கு கோப்பினை எனது மேல்விசாரணைக்காக 12.02.2024ம் தேதி எடுத்துக்கொண்டேன்.

3. அன்றைய தினம் மதியம் சுமார் 3 அல்லது 4 மணியளவில் வழக்கின் சம்பவயிடத்திற்கு சென்று வாதி தனபாலின் வீட்டை பார்வையிட்டு அவரது வீட்டின் முன்பக்க கதவு எதிரிகளால் உடைக்கப்பட்டிருந்ததை எனது மொபைல் போனில் புகைப்படம் எடுத்தேன். மேலும் அ.சா.1 தனபாலை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு நிலையம் வந்து எனது செல்போனில் எடுத்த புகைப்படத்தில் இரண்டு புகைப்டங்களை பதிவிறக்கம் செய்து பிரிண்ட் போட்டு வழக்கு கோப்புடன் சேர்த்தேன். அதற்கான 65பி சான்றிதழை தற்போது

தாக்கல் செய்கிறேன். (**புகைப்படங்கள் இரண்டு வரிசை அ.சா.ஆ.9 ஆகவும், 65(பி) சான்றிதழ் அ.சா.ஆ.10 ஆகும்**)

4. 28.02.2024ம் தேதி அ.சா.1ற்கு சிகிச்சையளித்த குன்னூர் அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் ராஜேஷ்வரி அவர்களை விசாரித்து அ.சா.ஆ.5 காயச்சான்று பெற்று வழக்கு கோப்புடன் சேர்த்தேன். அன்றைய தினமே வழக்கு பதிவு செய்து முதல் புலன் விசாரணை மேற்கொண்ட சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சங்கரனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னிட்டு வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(பி), 324, 427, 506(2) மற்றும் 323 இதச வாக மாறுதல் செய்து பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். (**அந்த பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆகும்**)

5. எனது புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மையென தெரியவரவே எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது 294(பி), 324, 427, 506(2) மற்றும் 323 இதச ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. அ.சா.1, அ.சா.6 மற்றும் அ.சா.8 சாட்சிகளை தவிர வேறு யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1 எனது விசாரணையில் சம்பவமானது அவரது வீட்டிற்குள்ளாக நடந்ததாக தான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் சம்பவயிடம் அ.சா.1ன் வீட்டிற்கு வெளியே நடந்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. அ.சா.ஆ.4 விபத்து பதிவேட்டில் அ.சா.1 தன்னை தெரிந்த 4 நபர்கள் தாக்கியதாக கூறியதாக மருத்துவர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான், ஆனால் புகாரில் இரண்டு பேர் அடித்ததாக தான் சொல்லியுள்ளார். இவ்வழக்கில் மருத்துவமனையிலிருந்து அசால்ட் இன்டிமேசன் வந்ததா என்றால் அது தற்போது ஞாபகமில்லை. அ.சா.1 மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான வெளிநோயாளி சீட்டை நான் கைப்பற்றினேனா

என்றால் இல்லை. அது புகாருடனும் இணைத்து கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

3. சம்பவயிடத்திலிருந்து சேதமடைந்ததாக சொல்லப்படும் பொருட்களை நான் கைப்பற்றினேனா என்றால் இல்லை, நான் புகைப்படம் தான் எடுத்தேன். நான் சொல்வது போல் அ.சா.1ன் வீட்டு கதவில் எந்தவித சேதமும் ஏற்படவில்லை என்றும், உண்மையில் அவ்வாறு ஏற்பட்டிருந்தால் உடைந்த கதவை நான் கைப்பற்றியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் புகைப்படம் எடுத்த போது அ.சா.1 அவரது வீட்டில் தான் இருந்தார். அ.சா.1யை வைத்து புகைப்படம் எடுத்தேனா என்றால் இல்லை. அ.சா.ஆ.10 சான்றிதழை குற்ற இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. 2024ம் வருடம் மார்ச் மாதம் ஒரு தேதியில் கொலக்கொம்பை காவல் நிலையத்திலிருந்து நான் மாறுதலாகி சென்றேன், தேதி தற்போது ஞாபகமில்லை. அ.சா.ஆ.10 சான்றிதழை வழக்கிற்காக இன்றைய தேதியில் தயாரித்து முன்தேதியிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் நான் புகைப்படம் எடுத்த போதே அந்த சான்றிதழை தயார் செய்திருந்தால் குற்ற இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

5. அ.சா.ஆ.9 புகைப்படத்தில் அது எடுக்கப்பட்டதற்கான நேரம், தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.9 புகைப்படத்தை எங்கு பிரிண்ட் செய்தேன் என்று தற்போது ஞாபகமில்லை. மேற்படி புகைப்படத்தை பிரிண்ட் போட்ட நபரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், பிரிண்ட் போட்டதற்கு செலுத்திய தொகைக்கான ரசீதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. இவ்வழக்கிற்கு முன்பாக அ.சா.1ன் மகன் எதிரிகளின் அம்மாவை தாக்கியதாக ஒரு புகார் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் அ.சா.1ன் மகன் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டார் என்றால் சரிதான். அந்த வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டி அ.சா.1 கொடுத்த பொய்

புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

Thiru.R.Abdul Salam, B.A,B.L

Digitally signed by Thiru.R.Abdul Salam, B.A,B.L
Date: 2026.02.13 15:34:21 -0700

JUDICIAL MAGISTRATE,
COONOOR.